*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC. 531/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW-1 (LW-1)***

*Name / Father's Name: **திருமதி.அனிதா க/பெ. பாபு***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25.06.2026.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஒதியத்தூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.09.2024 அன்று நான் ஒதியத்தூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபொழுது, கெங்கவல்லி காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சேட்டு மற்றும் பெண் தலைமைக்காவலர் திருமதி.தமிழ்செல்வி ஆகியோர்கள், ஒதியத்தூரில் அரசு மதுபானங்களை அனுமதியின்றி விற்றுக்கொண்டிருப்பதாக எனக்கு தகவல் சொன்னார்.

2) நான், உடனே சம்பவயிடத்திற்கு சென்றேன். அப்பொழுது கெங்கவல்லி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.கணேஷ்குமார் தலைமையில் போலிசார் அங்கு வந்திருந்தார்கள். எதிரி பரிமளா க.பெ தனசேகர் என்பவரிடமிருந்து அரசு மதுபானங்களான DIMAND BRANDY-2, VEERAN பிராந்தி-3 மொத்தம் -5 பாட்டில்களை போலிசார், என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள்.

3) என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கைப்பற்றிய பாட்டில்களில் இருந்த திரவத்தை போலிசார், எங்கள் முன்னிலையில் சம்பவயிடத்திலேயே கீழே கொட்டி அழித்து

அழித்தல் மகஜரை என் முன்னிலையில் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். **(அழித்தல் மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார், என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. என் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட பாட்டில்களை எதிரியிடமிருந்து கைப்பற்றினார்களா என்றால் ஆமாம். கைப்பற்றுதல் மகஜரை யார் எழுதினார்கள் என்று தெரியாது என்று சொன்னால் சரிதான். அழித்தல் மகஜரை படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேனா என்றால் ஆமாம். கைப்பற்றுதல் மகஜரிலும், அழித்தல் மகஜரிலும் நான் கையொப்பம் செய்துள்ள நிலையில், அதில் எனது கிராம நிர்வாக அலுவலர் என்ற முத்திரையை இடவில்லை என்று சொன்னால் சரிதான்.

2) பொதுவாக, அலுவலக விஷயமாக ஒரு ஆவணத்தில் கையொப்பம் இடவேண்டும் என்றால் கிராம நிர்வாக அலுவலர் என்ற முத்திரையையும் இட்டால்தான் அந்த ஆவணம் சட்டப்படி செல்லுபடியாகக்கூடிய ஆவணம் என்று சொன்னால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் மேற்சொன்ன ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.06.25 18:15:03 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.531/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-4)***

*Name / Father's Name:* ***திருமதி.தமிழ்செல்வி க/பெ. முருகேசன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25.06.2026.**

**முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் கெங்கவல்லி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.09.2024 அன்று காலை 08.00 மணியளவில் நானும், என்னுடன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சேட்டு என்பவரும் காவல் உதவி ஆய்வாளர் திரு.கணேஷ்குமார் அவர்கள் தலைமையில், மதுவிலக்கு வேட்டை சம்மந்தமாக கெங்கவல்லி காவல் நிலைய சரகம் ஒதியத்தூர், பிள்ளையார் கோவில் அருகில் கண்காணித்து சென்றபொழுது, அங்கு ஒரு நபர் எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தோம்.

2) அப்போது அவர் அவரது பெயர் பரிமளா க.பெ தனசேகர் என்று கூறினார். பின்னர் எதிரி அவர் சுமார் 180 ML அளவுகொண்ட DIMAND BRANDY-2, VEERAN பிராந்தி-3 மொத்தம் -5 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனால் எதிரி பரிமளா என்பவரை, காவல் உதவி ஆய்வாளர் அன்றைய தினமே கைது செய்தார்.

3) பின்பு சம்பவ இடத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்த DIMAND BRANDY-2, VEERAN பிராந்தி-3 மொத்தம் -5 பாட்டில்களை, அந்த இடத்தில் பொதுநபர் சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன்வராத காரணத்தால் மேற்படி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளரை சம்பவயிடத்திற்கு வரவழைத்து அவர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில், காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றி, மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார்.

4) பின்பு கைப்பற்றிய வழக்கு சொத்தை யாருக்கும் பயன்படா வண்ணம் உயர் அதிகாரியின் உத்தரவு படி காவல் உதவி ஆய்வாளர் சம்பவயிடத்தில் மண்ணில் கொட்டி அழித்து, மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அழித்தல் மகஜர் தயார் செய்து, சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றார். அதன் பிறகு எதிரியை நிலையம் அழைத்துவந்து, எதிரியின் மீது வழக்கு பதிவு செய்ய, காவல் உதவி ஆய்வாளருக்கு நானும் உதவியாக இருந்தேன். காவல் உதவி ஆய்வாளர், என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நான் சொல்லும் சம்பவயிடமானது மக்கள் நடமாட்டமான பகுதி என்றால் சரிதான், ஆனால் நாங்கள் செல்லும் பொழுது அந்த இடத்தில் மக்கள் யாரும் இல்லை. இரசாயன பகுப்பாய்விற்காக ஏதேனும் மாதிரிகளை எடுத்து வைத்தோமா என்றால் இல்லை. என் முன்பாக சம்பவயிடத்தை காட்டக்கூடிய பார்வை மகஜரோ, மாதிரி வரைபடத்தையோ காவல் உதவி ஆய்வாளர் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். கைப்பற்றியதாக சொல்லும் சாராயத்தை எங்கு அழித்தோம் என்றால் சம்பவயிடத்தின் அருகில் அழித்தோம். காவல் உதவி ஆய்வாளர் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜரில் நான் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

2) நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த பாட்டில்களையும் கைப்பற்றவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது போடப்பட்ட பொய்யான வழக்கிற்காக, காவல் உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், வழக்கிற்காக சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.06.25 18:15:10 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.531/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-5)***

*Name / Father's Name:* ***திரு.கணேஷ்குமார் த/பெ. முருகேசன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25.06.2026.**

**முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் கெங்கவல்லி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.09.2024 அன்று காலை 08.00 மணியளவில் நானும், எனது தலைமையில் என்னுடன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சேட்டு மற்றும் தலைமைக்காவலர் திருமதி.தமிழ்செல்வி ஆகியோர்களுடன், மதுவிலக்கு வேட்டை சம்மந்தமாக கெங்கவல்லி காவல் நிலைய சரகம் ஒதியத்தூர், பிள்ளையார் கோவில் அருகில் கண்காணித்து சென்றபொழுது, அங்கு ஒரு நபர் எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தோம்.

2) அப்போது அவர் அவரது பெயர் பரிமளா க.பெ தனசேகர் என்று கூறினார். பின்னர் எதிரி அவர் சுமார் 180 ML அளவுகொண்ட DIMAND BRANDY-2, VEERAN பிராந்தி-3 மொத்தம் -5 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனால் எதிரி பரிமளா என்பவரை அன்றைய தினமே கைது செய்தேன்.

3) பின்பு சம்பவ இடத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்த DIMAND BRANDY-2, VEERAN பிராந்தி-3 மொத்தம் -5 பாட்டில்களை, அந்த இடத்தில் பொதுநபர் சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன்வராத காரணத்தால் என்னுடன் வந்த போலிஸ் சாட்சிகள் மற்றும் மேற்படி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளரை வரவழைத்து அவர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளரிடம் சாட்சி

கையொப்பம் பெற்றேன். (**கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்பு கைப்பற்றிய வழக்கு சொத்தை சம்பவயிடத்தில் எனது உயர் அதிகாரியின் உத்தரவின்படி, மேற்படி போலீஸ் சாட்சிகள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளர் முன்னிலையில் மண்ணில் கொட்டி அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்து, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளரிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். (**அழித்தல் மகஜர் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

5) பிறகு எதிரியை நிலையம் அழைத்து வந்து எதிரியின் மீது குற்ற எண்.159/2024 சட்டப்பிரிவு 4(1)(C) of TNP (Amendment) Act 2024-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. சம்பவம் முதற்கட்ட விசாரணையில் உண்மையென தெரியவந்ததால் எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். பிறகு வழக்கு விசாரணையை முடித்து சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1) நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் மக்கள் வசிப்பிட பகுதி என்றால் துாரதுாரமாக வீடுகள் உள்ளன. சம்பவ இடம் மக்கள் நடமாட்டமான பகுதி என்றால் சரிதான். சம்பவம் இடம் தொடர்பாக பார்வை மகஜர், மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) கைப்பற்றியதாக சொல்லப்படும் சாராயத்தை, அளந்து பார்த்தோமா என்றால் இல்லை, தோராயமாக கூறியுள்ளோம். இரசாயன பகுப்பாய்விற்காக ஏதேனும் மாதிரிகளை எடுத்து வைத்தோமா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்களை அழிக்க எனக்கு சட்டப்படி அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

3) நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதியப்பட்டுள்ளது என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், வழக்கிற்காக சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.06.25 18:15:19 +0530

Judicial Magistrate No.2, Attur.